<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 32/2022

Deposition of Witness : PW 1

Name : கணேஷ் (வயது – 44)

Father's Name /W/o : த/பெ குப்புசாமி

Calling : –

Address : அரக்கோணம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 19.08.2026.

## <u>குறுக்கு விசாரணை</u>

1. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி தாவா சொத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் என்னுடன் பிறந்த சகோதரர் ஆவார். 2 ஆம் வாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் அவர் எனக்கு மனைவி ஆவார். வழக்கு சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. வழக்கு சொத்து தவிர்த்து வேறு ஏதுவும் குடும்ப சொத்து உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி குடும்ப சொத்து குறித்து என் தந்தை, எனக்கு மற்றும் 2 ஆம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்றால் இல்லை.

2. தாவா சொத்து தற்போது எந்த கிராமத்தில் உள்ளது என்றால் சேந்தமங்கலம் கிராமம் அரக்கோணத்தில் உள்ளது. மற்ற இதர சொத்துக்கள் எந்த ஊரில் உள்ளது என்றால் அரக்கோணம் நகராட்சியில் உள்ளது. தாவா சொத்து தவிர்த்து இதர சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் என் தந்தை பெயரில் உள்ளது அவர் அனுபவித்து வருகிறார். வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 219/2பி.

3. வழக்கு சொத்தின் அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. 17208 சதுர அடி. வழக்கு சொத்து எந்த வருடத்தில் யார் பெயரில் நான் வாங்கினேன் என்றால் கஜேந்திரன் கூட்டுபட்டாவாக இருந்தது அவரிடமிருந்து வாங்கினேன். கஜேந்திரன் பொது அதிகாரி ஆவார். கஜேந்திரனுக்கு யார் பொது அதிகாரம் கொடுத்தார் என்றால் தெரியாது. கஜேந்திரன் பெயருக்கு பொது அதிகாரம் கொடுப்பதற்கு முன்பு யார் பெயரில் வழக்கு சொத்து இருந்தது என்றால் தெரியாது. வழக்கு சொத்து நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

4. எந்த வருடத்தில் வில்லங்கம் வாங்கி பார்த்தேன் என்றால் 2011 ஆம் ஆண்டில் வாங்கி பார்த்தேன். நான் 2010 ஆம் ஆண்டில் கிரையம் வாங்கியுள்ளேன் என்றாலும், கிரையம் வாங்கிய ஒரு வருடத்திற்கு பிறகு தான் வில்லங்கம் பார்த்தேனா என்றால் வருடம் தவறுதலாக சொல்லிவிட்டேன். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு பார்த்த வில்லங்க சான்றிதழை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கினேன் என்றால் ரூ.6,40,000 வாங்கினேன். மேற்படி ரூ.6,40,000 முழு தொகையாக கொடுத்து வாங்கினேனா என்றால் ஆம். மேற்படி ரூ.6,40,000 எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் நான் ICICI LOMBARD INSURANCE நிறுவனத்தில் வேலை செய்தேன்.

5. நான் எத்தனை வருடங்களாக அங்கு வேலை செய்கிறேன் என்றால் 2007 முதல் 2013 வரை வேலை செய்தேன். எனக்கு எவ்வளவு சம்பளம் என்றால் ஒரு மாதத்திற்கு ரூ.45,000. மேற்படி என் சம்பள பணத்தை வைத்துதான் தாவா சொத்தை வாங்கினேன் என்பதற்கு ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ – 1 நான் வாங்கிய கிரைய பத்திரத்தில் மேற்படி நான் ICICI LOMBARD நிறுவனத்தில் வேலை செய்தேன் என்றும் அதன் சம்பளம் பணத்தை வைத்து சொத்தை வாங்குவதாக குறிப்பிடவில்லை என்றால் இல்லை.

**(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**